# கணக்கீடு

## அறிக்கையிடும் காலத்திற்குப் பிந்திய நிகழ்வுகள்



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

**தேர்ச்சி 11.0**

**தேர்ச்சி மட்டம் 11.8**

## இலங்கை கணக்கீட்டு நியமம் - 10
## அறிக்கையிடும் காலத்திற்குப் பிந்திய நிகழ்வுகள்

அறிக்கையிடும் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள் என்பது அறிக்கையிடப்படும் திகதிக்கும் நிதிக்கூற்றுக்களை வெளியீடு செய்வதற்கு அதாவது பிரசுரிப்பதற்கு அதிகாரம் வழங்கப்படும் திகதிக்கும் இடையில் நடைபெறும் நிகழ்வுகள் அறிக்கையிடும் காலத்திற்கு பிந்திய நிகழ்வுகள் ஆகும்.

இந்த அறிக்கையிடும் காலத்திற்குப் பிந்திய நிகழ்வுகள் நிறுவனத்திற்குச் சாதகமாகவோ அன்றேல் பாதகமாகவோ அமையலாம்.

**உதாரணம் :**

குறிக்கப்பட்ட கம்பனியொன்று 31-03-2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களை 30-05-2017 இல் பூரணப்படுத்தியது.

இக் கம்பனி 29-06-2017 இல் நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்து வெளியிடுவதற்கு இயக்குனர் சபை அங்கீகாரம் வழங்கி கையொப்பமிட்டது.

⇒ 30-06-2017 இல் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களை வெளியீடு செய்தது.

⇒ 01-08-2017இல் பங்குதாரருக்கும் ஏனையோருக்கும் கிடைக்கப் பெற்றது.

⇒ 15-08-2017 இல் ஆண்டுப் பொதுகூட்டத்தில் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்பட்டது.

⇒ 17-05-2017 அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கோவை செய்யப்பட்டன.

## அறிக்கையிடும் காலத்திற்குப் பிந்திய நிகழ்வுகளுக்குரிய காலம்

| | | |
|---|---|---|
| அறிக்கையிடும் திகதி | → | வெளியீடு செய்ய அங்கீகாரம் வழங்கிய திகதி |
| 31-03-2017 | | 29-06-2017 |

## அறிக்கையிடும் திகதி

குறிப்பிட்ட கம்பனியின் குறிப்பிட்ட நிதியாண்டு இறுதித் திகதியே அறிக்கையிடும் திகதியாகும்.

நிதியாண்டு காலம்

01-04-2016 ----------------------- 31-03-2017 எனின்

அறிக்கையிடும் திகதி 31-03-2017 ஆகும்.

தொகுப்பு : திரு.சி.தவராஜா - ஆசிரியர்- கணக்கீடு (யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்)

கணினி வடிவமைப்பு : திரு.சி.கிரிசாந்தன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## அதிகாரம் அளிக்கப்படும் திகதி

இயக்குனர் சபையானது பங்குதாரர் சார்பாக நிதிக்கூற்றுகளை வெளியீடு செய்வதற்கு அதிகாரம் அளிப்பதற்காக கையொப்பம் இடப்பட்ட திகதியினை அதிகாரம் அளிக்கப்படும் திகதி ஆகும்.

நிதியாண்டு காலம் கையொப்பமிடப்பட்ட திகதி

01-04-2016 ———— 31-03-2017 ———— 29-06-2017

அதிகாரம் அளிக்கப்படும் திகதி 29-06-2017 ஆகும்.

## அறிக்கையிடும் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகளின் வகைகள்

01 சீராக்கம் செய்ய வேண்டிய நிகழ்வுகள்

02 சீராக்கம் செய்ய வேண்டியதல்லாத நிகழ்வுகள்

### சீராக்கம் செய்ய வேண்டிய நிகழ்வுகள்

அறிக்கையிடும் காலத்தின் இறுதி திகதியிலிருந்த நிலைமைகளுக்கு மேலதிகமாக சான்றுகளை வழங்கும் நிகழ்வுகள் சீராக்கம் செய்ய வேண்டிய நிகழ்வுகள் ஆகும்.

**சீராக்கம் செய்ய வேண்டிய நிகழ்வுகளுக்கு உதாரணம்**

1. குறித்த கணக்காண்டு காலத்தில் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர் ஒருவரினால் தொடரப்பட்ட வழக்குத் தொடர்பில் அறிக்கையிடும் திகதிக்குப் பிந்திய தினத்தில் செலுத்த வேண்டிய நட்ட ஈடு
2. குறித்த கணக்காண்டு காலத்தின் கடன்பட்டோன் ஒருவர் அறிக்கையிடும் திகதிக்குப் பிந்திய தினத்தில் வகையற்றவராதல்.
3. அறிக்கையிடும் திகதில் காணப்பட்ட இருப்புக் கிரயமானது அறிக்கையிடும் திகதிக்குப் பின்னரான திகதியில் நிகரத் தேறத்தக்க பெறுமதி குறைவாக இருத்தல்
4. அறிக்கையிடும் திகதிக்கு முன் கொள்வனவு செய்யப்பட்ட சொத்தின் கிரயம் அல்லது விற்பனை செய்யப்பட்ட சொத்தின் மூலம் பெற்ற தொகை ஆகியவற்றை அறிக்கையிடும் திகதிக்கு பின் தீர்மானித்தல்.

தொகுப்பு : திரு.சி.தவராஜா - ஆசிரியர்- கணக்கீடு (யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்)
கணினி வடிவமைப்பு : திரு.சி.கிரிசாந்தன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

5. அறிக்கையிடும் திகதிக்கு முன்னரான நிகழ்வுகளின் காரணமாக அறிக்கையிடும் திகதியில் இலாபப் பகிர்வு அல்லது உபகாரக் கொடுப்பனவு செய்ய வேண்டியமைக்கான சட்டக் கடப்பாட்டினை நிறுவனம் கொண்டிருக்குமானால் அத்தகைய இலாபப் பகிர்வு / உபகாரக் கொடுப்பனவு ஆகியவற்றை அறிக்கையிடும் திகதிக்குப் பின் தீர்மானித்தல்.
6. மோசடிகள் / தவறுகள் கண்டுபிடிக்கப்படுவதன் மூலம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும் தகவல்கள் தவறானதாக காணப்படுதல்.
7. பாரிய தீ விபத்து நிகழ்ந்து நிறுவனம் தொடர்ந்தும் இயங்கக்கூடிய நிலை பாதிப்படைந்துள்ளது என அறிவிக்கும் போது.

## சீராக்கம் செய்ய வேண்டியதல்லாத நிகழ்வுகள்

அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் ஏற்பட்ட புதிய நிலைமைகள் அல்லது தோற்றுவித்த நிகழ்வுகள் சீராக்கம் செய்ய வேண்டியதல்லாத நிகழ்வுகள் ஆகும்.

**சீராக்கம் செய்ய வேண்டியதல்லாத நிகழ்வுகளுக்கு உதாரணம்**

1. அறிக்கையிடும் திகதிக்குப் பின்னரான ஒரு பாரிய வணிக இணைப்பு
2. ஒரு தொழிற்பாட்டை முடிவுக்குக் கொண்டுவரும் திட்டத்தை அறிவித்தல்.
3. குறிப்பிடக்கூடிய உத்தரவாதங்களை வழங்குதல்.
4. சொத்துக்களை பெருமளவில் கொள்வனவு செய்தல்
5. முக்கியமான நடைமுறையல்லாத சொத்து தீயினால் அழிவடைதல்
6. சொத்து விற்பனை செய்வதற்கான அறிவித்தல்
7. அரசாங்கம் வியாபாரத்தின் ஒரு பகுதியை சுவீகரித்தல்
8. சொத்துக்களின் விலைகள் வழமைக்கு மாறான பாரிய மாற்றத்திற்குள்ளாதல்
9. வெளிநாட்டு மாற்று வீதத்தில் வழக்கத்திற்கு மாறாக மாற்றம் ஏற்படுதல்.

தொகுப்பு : திரு.சி.தவராஜா - ஆசிரியர்- கணக்கீடு (யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்)
கணினி வடிவமைப்பு : திரு.சி.கிரிசாந்தன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



## பயிற்சி



1) கீர்த்தனா PLC இன் 31-03-2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் கம்பனியின் இயக்குனர்களால் 15-05-2017 இல் அதிகாரமளிக்கப்பட்டுள்ளன. கம்பனியின் வருடாந்த பொதுக்கூட்டமானது 30-05-2017 இல் இடம்பெற்றது. பின்வரும் நிகழ்வுகள் 31-03-2017 இற்குப் பின்னர் கம்பனியில் இடம்பெற்றன.

A. 31-03-2017 இல் ரூபா 600000 தரவேண்டிய கடன்பட்டோர் உருவர் 20-04-2017 இல் முறிவடைந்தவராக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார்.

B. 31-03-2017 இல் ரூபா 1000000 கிரயமுடைய சரக்கிருப்புக்கள் 30-04-2017 இல் ரூபா 900000 இற்கு விற்பனை செய்யப்பட்டன.

C. 31-03-2017 இல் கம்பனியின் பொறுப்பொன்றான ரூபா 600000 இனை உறுதிப்படுத்தி 25-05-2017 இல் நீதிமன்ற வழக்கொன்றின் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

D. 15-05-2017 இல் சாதாரண பங்கொன்றிற்கு ரூபா 03 இறுதிப்பங்குலாபமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இக் கம்பனியின் 31-03-2017 இல் முடிவடைந்த நிதிக்கூற்றுக்களில் LKAS - 10 (அறிக்கையிடல் காலத்திற்கு பின்னரான நிகழ்வுகள் ) இதன்படி மேலே காணப்படும் எந்த நிகழ்வுகள் சீராக்கம் செய்யப்படல் வேண்டும்?

1. A, B மாத்திரம்
2. C, D மாத்திரம்
3. A, B, C மாத்திரம்
4. B, C, D மாத்திரம்
5. A, B, C, D ஆகிய எல்லாம். (………………..)

2) வரையறுத்த மாலினி பொதுக்கம்பனியின் 31-03-2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் 15-06-2017 இல் இயக்குனர்களால் அதிகாரமளிக்கப்பட்டன. 31-03-2017 இலிருந்து 15-06-2017 வரையான காலப்பகுதிக்குள் கம்பனியில் பின்வரும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

A. 15-04-2017 இலிருந்து வியாபாரத்தின் ஒரு பகுதியை நிறுத்தும் திட்டத்திற்கான அறிவிப்பினை வீடுத்தல். இதனால் வருடாந்தம் ரூபா 500000 ஐ சேமிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

B. 20-04-2017 இல் பிரதான உற்பத்திப் பொறி தீயினால் அழிக்கப்பட்டுள்ளது. அதனால் ரூபா 1000000 நட்டம் ஏற்பட்டது.

C. 30-04-2017 இல் மேற்கொள்ளப்பட்ட கடன் விற்பனையினால் எழுந்த ரூபா 500000 மீதியைக் கொண்ட கடன்பட்டோரொருவர் 30-05-2017 இல் முறிவடைந்துள்ளார்.

D. 15-06-2017 இல் சாதாரண பங்குதாரருக்கு ரூபா 300000 இறுதிப் பங்குலாபமாக பிரகடனப்படுத்தல்.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

LKAS 10 (அறிக்கையிடல் காலத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்) இன் படி மேலே கூறப்பட்டுள்ள நிகழ்வுகளில் எவை 31-03-2017 இல் முடிவடைந்த வருடத்தில் சீராக்கம் செய்யத் தேவையற்ற நிகழ்வுகள் எனக் கருதப்படும்?

1. A, B மாத்திரம்
2. B, C மாத்திரம்
3. A, C, D மாத்திரம்
4. B, C, D மாத்திரம்
5. A, B, C, D ஆகிய எல்லாம். (………………..)

3) பாலன் PLC இன் 31-03-2017 இல் முடிவடைந்த வருடத்திற்கானநிதிக்கூற்றுக்களானவை இயக்குனர்களில் 30-06-2017 இல் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. 31-03-2017 தொடக்கம் 30-06-2017 வரையான கால்பகுதியில் கம்பனியில் பின்வரும் நிகழ்வுகள் இடம்பெற்றது.

A. 01-05-2017 இலிருந்து கம்பனியின் முதலீட்டின் சந்தைப் பெறுமதியானது தொடர்ச்சியாக குறைவடைந்து செல்கின்றது.

B. 01-03-2017 இல் கடனுக்குப் பொருட்களை வாங்கி கடன்பட்டோர் ஒருவர் 19-05-2017 இல் நீதிமன்றத்தால் முறிவடைந்தவராகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார்.

C. 30-05-2017 இல் ஏற்பட்ட தீ விபத்தினால் 31-03-2017 இலிருந்து காணப்பட்ட இருப்புக்கள் அழி-வடைந்துள்ளது.

D. கம்பனிக்கு சொந்தமான 31-03-2017 இல் காணப்பட்ட நிலமொன்று வீதியொன்றை நிர்மாணிப்பதற்காகப் பெற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கும் கடிதமொன்று 20-06-2017 இல் அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்டது.

மேற்கூறிய நிகழ்வுகளில் LKAS - 10 (அறிக்கையிடற் காலத்திற்குப் பிந்திய நிகழ்வுகள்) இன் படி கம்பனியின் 31-03-2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யத் தேவையற்ற நிகழ்வுகளாகக் கருதப்படும் நிகழ்வுகள் எவை?

1. A, B மாத்திரம்
2. A, D மாத்திரம்
3. A, C, D மாத்திரம்
4. B, C, D மாத்திரம்
5. A, B, C, D ஆகிய எல்லாம்.

(………………..)



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

4) கம்பனியொன்றின் கணக்காண்டு 31-03-2017 இல் முடிவடைந்தது. இயக்குனர்கள் நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்கு 30-06-2017 இல் அதிகாரமளித்திருந்தனர். கம்பனியின் வருடாந்த பொதுக்கூட்டம் 15-07-2017 இல் இடம்பெற்றது. கம்பனி தொடர்பான பின்வரும் நிகழ்வுகள் 31-03-2017 இற்குப் பின்னர் இடம்பெற்றன.

A. 31-03-2017 இல் உள்ளவாறான ரூபா 500000 மீதியுடைய கடன்பட்டோர் ஒருவர் 30-04-2017 இல் முறிடைந்தவராகப் பிரகடனப்படுத்தப்பட்டார்.

B. 31-03-2017 இல் ரூபா 500000 மீதியுடைய கடன்பட்டோர் ஒருவர் 10-07-2017 இல் முறிவடைந்தவராகப் பிரகடனப்படுத்தப்பட்டார்.

C. 31-03-2017 இல் உள்ளவாறான ரூபா 1000000 கிரயத்தில் மதிப்பிட்ட சரக்கிருப்பானது 10-04-2017 இல் ரூபா 900000 இற்கு விற்கப்பட்டது.

D. முதலீடுகளின் சந்தைப் பெறுமதியானது 30-04-2017 இலிருந்து 30-06-2017 வரையிலான காலப்பகுதியில் ரூபா 300000 இனால் குறைவடைந்தது.

மேற்படி நிகழ்வுகளின் 31-03-2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட வேண்டியவை எவை?

1. A, B மாத்திரம்
2. A, C மாத்திரம்
3. B, C மாத்திரம்
4. A, C, D மாத்திரம்
5. B, C, D ஆகியன மாத்திரம் (………………..)



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk